DINAMALAR

13 MAR 2023

PAGE 1

# மத்திய தகவல் பாதுகாப்புத் துறையுடன் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, மார்ச் 13–**

மத்திய தகவல் பாதுகாப்புத் துறையின் மின்னணு பரிவர்த்தனைகள் மற்றும் பாதுகாப்புக்கான சொசைட்டி நிறுவனத்துடன், புதுச்சேரி பல்கலைக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் நடந்த இந்த ஒப்பந்தத்தில் பேராசிரியர் ரஜீஷ் பூடானி, எஸ்.இ.டி.எஸ்., நிர்வாக இயக்குனர் சுப்ரமணியன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இயக்குநர் தரணிக்கரசு மற்றும் புல முதன்மையர் சுப்ரமணியம் ராஜி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பாதுகாப்பிற்கான சமூகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் சுப்ரமணியன், பிரேம் லட்சுமண் தாஸ், நடராஜன், ரேஷ்மி திருப்பதி, பல்கலைக் கழக புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



மத்திய தகவல் பாதுகாப்புத் துறையின் மின்னணு பரிவர்த்தனைகள் மற்றும் பாதுகாப்புக்கான சொசைட்டி நிறுவனத்துடன், புதுச்சேரி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. அருகில் துணைவேந்தர் குர்மீத் சிங்

**கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள்:** இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தகவல் பாதுகாப்பின் வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பப் பகுதிகளில் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும் திறன் மேம்பாடு, ஆலோசனை சேவைகள், கார்ப்பரேட் பயிற்சியை அரசு நிறுவனங்கள், வங்கிகள், பிற பொது அல்லது தனியார் துறை நிறுவனங்களுக்கு வழங்க இணைந்து பணியாற்ற உள்ளனர். அத்துடன் கூட்டு நிகழ்வுகள், பட்டறைகள், பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட உள்ளது.

நிகழ்ச்சியை பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளியின் பேராசிரியர் சித்ரலேகா ஒருங்கிணைத்தார். கணினி அறிவியல் துறைத் தலைவர் சத்யா நன்றி கூறினார்.

DINAMANI

13 MAR 2023

PAGE 4

# புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, மார்ச் 12:** இந்திய முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் சார்ந்த மின்னணு பரிவர்த்தனை, பாதுகாப்பு நிறுவனத்துடன் புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தகவல் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற இந்திய முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் சார்ந்த மின்னணு பரிவர்த்தனை, பாதுகாப்பு நிறுவனத்துடன் (எஸ்இடிஎஸ்) புதுவைப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில், பதிவாளர் பேராசிரியர் ரஜீஷ்பூடானி, சென்னை எஸ்இடிஎஸ் நிர்வாக இயக்குநர் என்.சுப்பிரமணியன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

நிகழ்ச்சியில், பல்கலைக்கழக இயக்குநர் (கல்வி) கே.தரணிக்கரசு, புல முதன்மையர் (சர்வதேச உறவுகள்) சுப்பிரமணியம்ராஜூ ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இதன் மூலம் திறன்மேம்பாடு, ஆலோசனை சேவைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உதவும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAMALAR

13 MAR 2023

PAGE 4

# புதுச்சேரி பல்கலையில் 3 நாள் தேசிய பயிலரங்கம்

**புதுச்சேரி, மார்ச் 13–**

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியின் உடற்கல்வி மற்றும் யோகா துறை சார்பில், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வழிநடத்துதல் மற்றும் சுய உடல், மனதை மேம்படுத்துதல் குறித்த மூன்று நாள் தேசிய பயிலரங்கம் நடந்தது.

லாஸ்பேட்டையில் கடந்த 8ம் தேதி முதல் 10ம் தேதி வரை நடந்த பயிலரங்கை ஸ்ரீபெரும்புதுார், ராஜிவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தினர் ஒருங்கிணைத்தனர்.

துவக்க விழாவிற்கு, கல்லுாரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். உடற்கல்வி மற்றும் யோகா துறை தலைவர் (பொ) முருகேசன் வரவேற்றார். ராஜிவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் இயக்குநர் ஷிப்நாத் தேப், பயிலரங்கை துவக்கி வைத்து, எதிர்கால இந்தியாவிற்கு இளைஞர்களின் உடல் மற்றும் உலோக ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் பற்றி கூறினார்.

புதுச்சேரி அரசின் மின் ஆளுமை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை செயலாளர் பத்மா ஜெய்ஸ்வால், மனநலம் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேற்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார்.

பின், பங்கேற்றநபர்களோடு ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் அதன் தேவை மற்றும் உந்துதல் பற்றி கலந்துரையாடினார். உடல் செயல்பாடு, யோகா முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தார்.

ஹோம் பிளான்குரு பிரைவேட் லிட்., நிறுவனம் நிர்வாக இயக்குநர் பத்மஜா பிரியதர்ஷினி வாழ்த்துரை வழங்கினார். பயிற்சி பட்டறையின் நோக்கம் குறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஸ்வரி கூறினார். இதில், புதுச்சேரி, தமிழகத்தின் பல கல்லுாரிகளை சேர்ந்த 130 பேர் கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லுாரியின் உடற்கல்வி மற்றும் யோகா துறை சார்பில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வழிநடத்துதல் சம்பந்தமான தேசிய பயிலரங்கம் நடைபெற்றது.